ஆழ்ந்த நம்பிக்கை இமயமலையைப் போன்றது. அதை எவராலும் அசைத்துவிட முடியாது என விவேகானந்தர் குறிப்பிட்டார். ஆம். தமிழகத்தை முன்னிலைப்படுத்துவேன், தமிழக மக்களை உயர்த்திக் காட்டுவேன் என்கின்ற ஆழ்ந்த நம்பிக்கையோடு, உயர்வான எண்ணங்களோடு (மேசையைத் தட்டும் ஒலி) உயர் கல்வித் துறையிலே அறிவிப்புகளைச் செய்து, சீரிய திட்டங்களைச் செயல்படுத்தி வருபவர் மாண்புமிகு அம்மா அவர்கள். உரிமைகளை நிலைநாட்டும் வீராங்கனை, உழைக்கும் தொண்டர்களின் உயிர்த்துடிப்பு, மாட்சிமை மிகுந்த ஆட்சியை வழங்கும் நம்பிக்கை ஒளிக்கீற்று, தரணிக்கே புகழ் சேர்க்கும் புரட்சித் தலைவி, மாண்புமிகு அம்மா அவர்களுக்கு பேரவையின் சார்பில் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12—25

6. கவன ஈர்ப்பு

கொப்பரைத் தேங்காய், அரசே கொள்முதல் செய்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர்கள் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, திரு. அ. அஸ்லம் பாஷா, திரு. எம். ஆறுமுகம், திரு. கே. உலகநாதன், திரு. பி.எல். சுந்தரம், திரு. ஜே.ஜி. பிரின்ஸ் ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவர். மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

***முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொப்பரைத் தேங்காயை அரசே கொள்முதல் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்து மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சரின் கவனத்தை ஈர்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்துள்ள

2015 செப்டம்பர் 25] [திரு. செல்லூர் கா. ராஜு]

கவன ஈர்ப்பு அறிவிப்புத் தொடர்பான விவர அறிக்கை ஒன்று அவையில் வைக்கப்பட்டுள்ளது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அறிக்கை

தமிழ்நாட்டில் சராசரியாக 4,28,000 ஹெக்டேரில் தென்னை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. அதில் ஒரு ஹெக்டேருக்கு சராசரியாக 9,600 தேங்காய்கள் விளைவிக்கப்படுகின்றன.

தமிழ்நாட்டில், மாவட்ட வாரியாக தென்னை சாகுபடி மற்றும் தேங்காய் உற்பத்தி விவரம் பின்வருமாறு:

தமிழ்நாட்டில் சராசரி தென்னை உற்பத்தி விவரம்

வ. எண்	மாவட்டம்	பரப்பளவு (ஹெக்டேரில்)	தென்னை உற்பத்தி (காய்கள் இலட்சத்தில்)	தென்னை உற்பத்தித் திறன் (காய்கள் ஹெக்டேரில்)
(1)	(2)	(3)	(4)	(5)
1.	நீலகிரி	55	1	1819
2.	அரியலூர்	331	17	5136
3.	பெரம்பலூர்	715	45	6294
4.	திருவண்ணாமலை	624	50	8013
5.	திருவள்ளூர்	971	75	7724
6.	விழுப்புரம்	1780	191	10731
7.	கடலூர்	1881	152	8081
8.	காஞ்சிபுரம்	3097	339	10947
9.	நாகப்பட்டினம்	3854	446	11573
10.	திருவாரூர்	4787	685	14310
11.	தூத்துக்குடி	5848	558	9542
12.	கரூர்	6641	291	4382

வ. எண்	மாவட்டம்	பரப்பளவு (ஹெக்டேரில்)	தென்னை உற்பத்தி (காய்கள் இலட்சத்தில்)	தென்னை உற்பத்தித் திறன் (காய்கள் ஹெக்டேரில்
13.	திருச்சிராப்பள்ளி	6487	572	8818
14.	சிவகங்கை	6825	700	10257
15.	தருமபுரி	5472	354	6470
16.	நாமக்கல்	7793	676	8675
17.	இராமநாதபுரம்	8213	599	7294
18.	புதுக்கோட்டை	9200	1266	13761
19.	விருதுநகர்	10041	1176	11712
20.	மதுரை	11305	1578	13959
21.	ஈரோடு	13056	1006	7706
22.	சேலம்	14457	618	4275
23.	திருநெல்வேலி	15667	1573	10041
24.	கிருஷ்ணகிரி	15781	2846	18035
25.	தேனி	19907	2767	13900
26.	வேலூர்	21512	2330	10832
27.	கன்னியாகுமரி	23917	2871	12005
28.	திண்டுக்கல்	32069	1608	5015
29.	தஞ்சாவூர்	35237	5557	15771
30.	திருப்பூர்	56484	3613	6397
31.	கோயம்புத்தூர்	84531	12120	14338
மொத்தம்		4,28,538	46,680	9,607

2015 செப்டம்பர் 25] [திரு. செல்லூர் கா. ராஜு]

விவசாயிகளிடமிருந்து செய்யப்படும் கொப்பரை கொள்முதலைப் பொறுத்தவரை, தேசிய அளவில், தேசிய வேளாண் கூட்டுறவு விற்பனை இணையம் (NAFED), ஒவ்வோர் ஆண்டும் இந்திய அரசால் நிர்ணயிக்கப்படும் ஆதரவு விலையில் கொப்பரையைக் கொள்முதல் செய்யும்.

தேசிய வேளாண் கூட்டுறவு இணையத்தின் முகவராகத் தமிழ்நாட்டில், தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் செயல்பட்டு வருகிறது. 2015 ஆம் ஆண்டிற்கு இந்திய அரசு ஒரு கிலோ அரவைக் கொப்பரைக்கு ரூ.55.50 என்றும், பந்து கொப்பரைக்கு ரூ.58.30 என்றும் கொள்முதல் ஆதரவு விலையை நிர்ணயம் செய்துள்ளது.

எனவே, தேசிய கூட்டுறவு விற்பனை இணையம், தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம்மூலம் கொள்முதல் செய்யும் கொப்பரைக்கு, மத்திய அரசின் ஆதரவு விலையான, அரவைக் கொப்பரை கிலோ ஒன்றுக்கு ரூ.55.50 என்றும், பந்து கொப்பரை கிலோ ஒன்றிற்கு ரூ.58.30 என்ற விலையிலேயே கொள்முதல் செய்ய இயலும்.

ஆனால், கடந்த ஏப்ரல் 2014 முதல் செப்டம்பர் 2015 (22–9–2015) வரை, வெளிச் சந்தையில் கொப்பரை விலை கிலோ ஒன்றிற்கு சராசரியாக குறைந்தபட்சம் ரூ.87.14 ஆகவும், அதிகபட்சம் ரூ.97.36 ஆகவும் உள்ளது. அதாவது, மத்திய அரசு நிர்ணயித்த ஆதரவு விலையைவிட, சராசரி வெளிச் சந்தை விலை அரவைக் கொப்பரைக்கு ரூ.31.64 முதல் ரூ.41.86 வரை அதிகமாக உள்ளது குறிப்பிடத்தக்கது.

வெளிச் சந்தை விலை அதிகமாக உள்ளதால், இந்திய அரசின் ஆதரவு விலையில் கொப்பரை கொள்முதல் செய்ய இயலாது. வெளிச் சந்தை விலை, இந்திய அரசு அறிவித்துள்ள ஆதரவு விலையைவிடக் குறைவாக இருக்கும்பட்சத்தில், அரசாணை (நிலை) எண் 99, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 11–7–2006–ன்படி மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிந்துரையில் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்திற்குக் கொப்பரை கொள்முதல் செய்ய பிரேரணை அனுப்பப்படின், கொப்பரை கொள்முதல் செய்வது குறித்துப் பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.*

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கக்கூடிய விவர அறிக்கையை நான் படித்துப் பார்த்தேன். கொப்பரைத் தேங்காய்க்கு மத்திய அரசாங்கத்தினுடைய NAFED நிறுவனம் ஒரு கிலோ அரவைக் கொப்பரைக்கு ரூ.55.50 என்றும், பந்து கொப்பரைக்கு ஒரு கிலோ ரூ.58.30 என்றும் விலை நிர்ணயித்திருக்கின்றது. ஆனால், ஏப்ரல் 2014 முதல் செப்டம்பர் 2015 வரை கொப்பரைத் தேங்காய், வெளி அங்காடிகளிலே சராசரியாக ரூ.87.14 முதல் ரூ.97.36 வரைக்கும் விற்பனையாகி வரக்கூடிய ஒரு சூழலில், தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்தின் மூலமாக அரசே வாங்கக்கூடிய ஒரு சூழல் இல்லை என்பதை இந்த அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கின்றார்கள். இன்று கொப்பரைத் தேங்காயினுடைய விலை வெளி மார்க்கெட்டிலே அதிகமாக இருப்பது உண்மைதான். மத்திய அரசு நிர்ணயித்திருக்கக்கூடிய ஆதார விலை, மார்க்கெட்டுக்கு ஏற்ற சூழலில் இல்லாத ஒரு நிலையிலே, கொப்பரைத் தேங்காயினுடைய ஆதார விலையை உயர்த்துவதற்கு மத்திய அரசை வலியுறுத்துவதற்கும், அந்த அடிப்படையில் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்தின் மூலமாகக் கொப்பரைத் தேங்காயை வாங்கி, தென்னை விவசாயிகளுக்கு வளம் சேர்ப்பதற்கும் அரசு முன்வருமா என்று கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.*

திரு. எம். ஆறுமுகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொப்பரைத் தேங்காயை அரசே கொள்முதல் செய்ய வேண்டும் என்பதற்கான கவன ஈர்ப்புத் தீர்மானத்தின்மீது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கக்கூடிய விளக்கத்தைப் படித்துப் பார்த்தேன். இந்த விளக்கத்தில் தமிழகத்தில் 4,28,538 ஏக்கரில் தென்னை விவசாயம் நடைபெற்றுக் கொண்டிருப்பதைக் குறிப்பிட்டுச் சொல்லியுள்ளார்கள். கேரள மாநில அரசாங்கம் கூடுதல் விலை கொடுத்து கொப்பரையைக் கொள்முதல் செய்வதாகச் சொல்லப்படுகிறது. மத்திய அரசாங்கத்தால் அரவைக் கொப்பரைக்கான விலை கிலோ*

2015 செப்டம்பர் 25] [திரு. எம். ஆறுமுகம்]

ஒன்றுக்கு ரூ.55.50 என்றும், பந்து கொப்பரைக்கு கிலோ ஒன்றுக்கு ரூ.58.30 என்றும் நிர்ணயம் செய்யப்பட்டு, தமிழகத்தில் கொள்முதல் செய்யப்படுவதாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. எனவே, தமிழகத்தில் தென்னை விவசாயத்தில் அதிகமாக ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்குப் பலன் கிடைக்கக்கூடிய முறையில் கூடுதலான விலையைக் கொடுத்து NAFED மூலமாகக் கொப்பரைத் தேங்காயை வாங்குவதற்கு தமிழக அரசு மத்திய அரசை வலியுறுத்துமா என அறிய விரும்புகிறேன்.

பிற்பகல் 12—30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்திருந்த விவர அறிக்கையினைப் படித்தேன். தென் மாவட்டங்களில் தென்னை விவசாயிகள் அதிகமாக இருக்கின்றனர். கொப்பரைத் தேங்காய்க்கு தகுந்த விலை கொடுக்கப்பட்டால்தான் தென்னை விவசாயிகள் தற்போது இருக்கக்கூடிய நிலையைவிட தென்னை விவசாயத்தினை அதிகமாகப் பெருக்கவும், அதன்மூலம் அதிக வருவாய் பெறுவதற்கும் வாய்ப்பு இருக்கின்றது. மத்திய அரசு கொப்பரைத் தேங்காயின் கொள்முதல் விலையைக் குறைத்துக்கொண்டால் தென்னை விவசாயிகள்தான் அதிகமாகப் பாதிக்கப்படுவார்கள். எனவே, மத்திய அரசை வலியுறுத்தி கொப்பரைத் தேங்காயின் கொள்முதல் விலையை அதிகப்படுத்த மாநில அரசு முன்வர வேண்டும் என்று கவனத்தினை ஈர்த்து அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்களும் கொப்பரைத் தேங்காய் கொள்முதல் விலையை இந்திய அரசு பரிசீலித்து, கூடுதலான விலையை நிர்ணயம் செய்ய வலியுறுத்த வேண்டும் என்ற கோரிக்கையை இங்கே வைத்திருக்கிறார்கள்.*

[திரு. செல்லூர் கா. ராஜு] [2015 செப்டம்பர் 25

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த நான்கரை ஆண்டுகளில் இந்திய அரசினால் நிர்ணயிக்கப்பட்ட விலை நிர்ணயத்திற்குட்பட்டு, சந்தை விலை குறைவாக இருந்தபோது, கொள்முதல் செய்து, NAFED–க்கு கூட்டுறவு விற்பனை இணையத்தின் மூலமாக விற்பனை செய்து வந்தோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தற்போது குறிப்பிடுவதைப்போன்று கடந்த 2 ஆண்டுகளாக மைய அரசு நிர்ணயித்திருக்கின்ற கொப்பரைத் தேங்காய் கொள்முதல் விலையானது சந்தை விலையைக் காட்டிலும் குறைவாக இருக்கின்றது. மத்திய அரசு நிர்ணயித்த விலை குறைவாக இருப்பதன் காரணமாகவும், வெளி மார்க்கெட்டில் விலை அதிகமாக இருக்கின்ற காரணத்தினாலும் கூட்டுறவு விற்பனை இணையத்தில் கொடுக்க விவசாயிகள் யாரும் முன்வருவதில்லை. தென்னை விவசாயிகளின் நலன் காக்கின்ற தாய், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தில் இருக்கின்ற விவசாயத் தோழர்கள் கஷ்டப்படக் கூடாது என்பதற்காக, கடந்த நான்கு ஆண்டுக் கால ஆட்சியில் 25 சூரிய உலர் கலன்களை அமைத்துக் கொடுத்துள்ளார்கள். மொத்தம் 28 உலர் கலன்கள் தமிழகத்தில் தற்போது இருக்கின்றன.

மாண்புமிகு அம்மா அவர்கள், சந்தை விலை குறைகின்ற காலத்தில் கூடுதல் கொள்முதல் நிலையங்களாக ஆலங்குடி, வாழப்பாடி, திருப்புவனம், வாணியம்பாடி, குடியாத்தம் ஆகிய 5 இடங்களிலும் 2013–ல் இந்தக் கொப்பரை கொள்முதலை ஆரம்பித்தார்கள். அதுமட்டுமல்ல, தற்போது மாண்புமிகு அம்மா அவர்கள், தென்னை விவசாயிகளுக்குக் கூடுதல் விலை கிடைக்க வேண்டும் என்பதற்காகவும், அவர்கள் கஷ்டப்படக்கூடாது என்பதற்காகவும்தான் இன்றைக்கு ஈரோடு கூட்டுறவு விற்பனைச் சங்கம், பெருந்துறையிலும், நாமக்கல் மாவட்டத்தில் திருச்செங்கோடு விற்பனைச் சங்கம், ஜலகண்டபுரம், சேலம் மாவட்டம், மல்லிசமுத்திரம் ஆகிய மூன்று இடங்களிலும் ஏல மையம் ஆரம்பித்து, இன்றைக்கு யார் கூடுதல் விலை விவசாயிகளுக்குக் கொடுக்கிறார்களோ, அது விவசாயிகளுக்குக் கிடைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் வழிவகை செய்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, கடந்த 4 ஆண்டுகளில் தென்னை விவசாயிகள் கஷ்டப்படக்கூடாது என்பதற்காகப் பல்வேறு உதவிகளை கூட்டுறவுத் துறை மூலமாக மாண்புமிகு அம்மா அவர்கள் செய்து வருகிறார்கள்.

2015 செப்டம்பர் 25] [திரு. செல்லூர் கா. ராஜு]

இதுவரையிலும் இந்தியத் திருநாட்டில் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு விவசாயிகள் விளைவித்த பொருட்களுக்குக் கூடுதல் விலை கிடைக்க வேண்டும் என்பதற்காக ஏறத்தாழ 3,879 கிடங்குகளை கட்டிக்கொடுத்து, அந்தக் கிடங்குகளை அவர்கள் பயன்படுத்திக்கொண்டு, அவர்களுக்குக் கூடுதல் விலை கிடைக்கும்போது அவற்றை விற்பனை செய்துகொள்ளலாம் என்ற வசதி வாய்ப்பினை, இந்தியாவில் வேறு எந்த முதலமைச்சரும் செய்யாத ஒரு மாபெரும் சாதனையை மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செய்திருக்கிறார்கள் என்ற தகவலைச் சொல்லிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர்களின் கோரிக்கைகள் மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, துறைரீதியாக ஆய்வு செய்யப்பட்டு, நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

3. தகவல் கோரல்—*தொடர்ச்சி*

(ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். (குறுக்கீடுகள்) மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை அளித்தல். (குறுக்கீடுகள்) கவன ஈர்ப்பு முடிந்து நிகழ்ச்சி நிரலிற்குள் போய்விட்டோம். தற்போது கேட்கிறீர்களே? (குறுக்கீடுகள்) தற்போது மணி 12—30 ஆகின்றது. நிகழ்ச்சி நிரலிற்குள் நான் போய்விட்டேன். (குறுக்கீடுகள்) கவன ஈர்ப்பு முடிந்துவிட்டது. தற்போது நீங்கள் எழுப்புகிறீர்களே? (குறுக்கீடுகள்) கவன ஈர்ப்பு முடிந்துவிட்டது. (குறுக்கீடு) அப்போதே நீங்கள் எழுப்பியிருந்தால் நான் அனுமதித்திருப்பேன். (குறுக்கீடுகள்) நீங்கள் திடீரென்று கேட்டால் எப்படி? நாளைக்கு பார்க்கலாம். (குறுக்கீடுகள்) செல்வி பாலபாரதி, என்ன சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) திரு. பாலகிருஷ்ணன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) செல்வி பாலபாரதி, காலையிலே ஏதோ சொன்னீர்களே, என்ன சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)